ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

ஒருகாரியத்தை கைகண்ட பலனைக் கண்டெடுக்கவேண்டுமானால் புருஷகாரமென்று சொல்லப்படும் புருஷபிரயத்தினம் முதலிய திருஷ்ட ஸாதனங்களும், தைவமெனப்படும் பூர்வஜன்ம கர்மம் முதலிய அதிருஷ்ட ஸாதனங்களும் அனுகூலங்களாயிருந்தாற்றான் அடையலாம். இந்தஜன்மத்திலும், பூர்வஜன்மத்திலும், ஒருவனால் செய்யப்பட்ட கர்மங்கள், பயனையடைவதற்குக் காரணமாயிருப்பதுபோல் அன்னியர்களது தைவ புருஷகாரங்களும் அனுகூலமாயிருக்கவேண்டும். ஒருவனது தைவ புருஷகாரங்களோடு மற்றவரது தைவபுருஷகாரங்கள் ஒற்றுமையடையாமல் விரோதப்படுமானால் உத்தேசித்தகாரியம் கைகூடிவராது. அவற்றுள் எவை வலிமையுடையனவோ அவைதான் பயனையளிக்கும். இந்தவிஷயம் எல்லாசாஸ்திரங்களிலுமொரேவிதமாகத்தான் நிரூபிக்கப்படுகிறது. விசேஷமாக சோதிடநூல்களிலும், வைத்தியநூல்களிலும், வேதாந்தசாஸ்திரத்திலும் விரிவாகக்கூறப்பட்டிருக்கிறது. வாஸிஷ்ட ராமாயணத்தில்— "இரண்டு ஆட்டுக்கிடாய்கள் சண்டைபோடுவதுபோல் ஒருவனது இஹஜன்ம பூர்வஜன்மகர்மங்களும், ஒருவனது தைவபுருஷகாரங்களும், மற்றவனது தைவ புருஷகாரங்களும் ஒன்றற்கொன்று யுத்தம் செய்கின்றன. அவற்றுள் வலுத்த ஆடுஜெயிப்பதுபோல் வலுத்தகர்மம் ஜயிக்கும்." என்று விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஒருவன்தனித்துத் தன்பயனையடைய, ஸாதனங்கள் இப்படி இருக்குமாயின், உலகத்தில் பொதுவாய் எல்லா பிராணிகளுமொரேமாதிரி பயனையடையவேண்டுமாயின் எல்லோரும் செய்யும் பிரயத்தினம் ஒன்றற்கொன்று விரோதப்படாமலிருக்கவேண்டும் தைவமென்ற அதிருஷ்டமுமொத்துவரவேண்டும். அப்படியாவதற்கு எல்லோருமொரே அபிப்பிராயமுடையவர்களாகவேண்டும். பரமேசுவரனது திருவுள்ளமு மிதற்கிசைந்துவரவேண்டும். தற்காலத்திலனேகர் வர்ணாசிரம வேற்றுமையும், வர்ணாசிரமதர்மங்களும் அடியோடழிந்து விடவேண்டுமென்று அபிப்பிராயப்படுகின்றனர். பரமேசுவரனோவெனில் "தர்மஸம்ஸ்தாபனார்த்தாய," என்று வர்ணாசிரமதர்மங்கள் குன்றும்பொழுது அவைகளை நன்றாகஸ்தாபனம் செய்வதின்பொருட்டுநான் யுகந்தோறும் வருவேனென்று வர்ணாசிரமதர்மங்களைஸ்தாபித்துவிடவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார். இதனால் விவாஹவயது மசோதாசட்டமாவதில் பகவானுக்கு அபிப்பிராயமில்லையென்று தெரிகிறது. அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளுவதற்காகவே பாஷையெனப்படும் சப்தப்பிரமாணமேற்பட்டிருப்பதாக முன்னமேகூறினோம். பகவானது அபிப்பிராயத்தைப்பிரகாசிப்பிக்கும் உபநிடதம் கீதைமுதலியவற்றின் வசனங்களால் அதுவெளியாகிறது. சாஸ்திரங்களில் நம்பிக்கைவைத்துத்தான் ஸநாதனதர்மிகள் நாளதுவரையில் காரியத்தை ஸாதித்துவந்திருக்கிறார்கள். இனிமேலும் அந்தபகவான்றான்கதியென்று ஒரேஉறுதியாயிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை பகவானும் கைவிடமாட்டாரென்று துணிந்து யாவருமவரது அபிப்பிராயப்படி நடந்து சிரேயஸ்ஸையடைவார்களாக. சுபம்!

பத்திராதிபர்,

# ஆர்ய தர்மம்.

சுக்ல-௵ புரட்டாசி-௴ சஉ

## மாதாபிதாக்களிடம் பக்தியும், ஸஹோதரஸ்னேகமும்.

அனேகர் ஒற்றுமையடைவதற்கு அபிப்பிராயம் ஒன்றுபடுவதே காரணம். அப்படி அபிப்பிராயம் ஒன்றுபடுவதற்கு ஸ்னேகமும், பக்தியும் காரணம். பெரியாரிடம் பாராட்டும் அன்பு பக்தி எனப்படும். ஸமானர்களிடம் பாராட்டும் அன்பு ஸ்னேகமெனப்படும். தர்மசீலர்களும் நீதி நெறி தப்பாதவர்களுமான தர்மபுத்ரர் முதலான மன்னவரரசாங்கமாண்டு வந்தகாலத்தில் நம்பாதநாட்டில் பக்தி ஸ்னேஹங்கள் நிறைந்திருந்தன. கலிமகாராஜனது ஆதிபத்திய மகிமையால் கொடூரச்செய்கையையுடைய சில பாபிகள் பிறந்து நல்லொழுக்கமுடைய பெரியோர்களின் மனதைக் கலக்கி வருத்தப்படுத்துகிறார்கள். அவர் யாவரெனில் தாய் தந்தையர்களுக்கு பிள்ளைகளென்று பிறந்தவர்கள்தான். அதாவது--உலகத்தில் தாய் தந்தையர்கள், புத்திரனில்லையேஎன்று மிகமனவருத்தமுற்று, ஈசுவராராதனமுதலான நற்செய்கைகளைச்செய்து, ஜகதீசனது திருவருளால், ஒருபிள்ளையைப்பெற்றெடுத்து, அப்பிள்ளையைத் தனது உயிரைக்காட்டிலும், அதிகமாகக் காப்பாற்றி அதிமதுரமான உணவுகளையூட்டி, ஆடையாபரணங்களைப்பூட்டி, நெற்றியில் சுட்டிகட்டி, தொட்டிலிலிட்டாட்டி, முதுகினில்தட்டி, என் கண்ணுட்டியென்று பாராட்டி, அழகானபொட்டுமிட்டுக் கொண்டாடி, சிறுவயதிலேயே நல்லசெய்கைகளைப் போதித்து, பள்ளிக்கூடத்திற் சேர்ப்பித்து, கல்வியைக்கற்பித்து, மிகக்களிப்புடன் மணமும் செய்வித்து, மிக அருமையாய் வளர்த்து, அப்பிள்ளையையே தனக்குப்பெரிய சொத்தாயும் உயிராயும் எண்ணி ஆதரித்து வருகிறார்கள். இங்ஙனம் ஆதரிக்கப்பட்ட குமாரனோவெனில், தனது யௌவனப்பருவத்தில் காமதேவனுக்குக் கட்டுப்பட்டு, மணம்செய்த மனைவியின், கருவிழிக் கொடுவலையால்ச் சுற்றப்பட்டு, மிகக்காதல்கொண்டு, அவளுரைக்கும் துர்புத்தியை நல்லதென்றுநம்பி, இங்ஙனம் வளர்த்தெடுத்த, தாய் தந்தையர்

களையும், அவர்கள் பூஜித்துவந்த பெரியார்களையும் இகழ்ந்து, தனதுயிருக்கொப்பாய் ஒரேவயற்றில்ஜனித்த ஸகோதரர்களை மறந்து மனையாளின் ஸகோதரரைப்புகழ்ந்து, இல்லாளின் திருமேனியைக் கண்டே மிகமகிழ்ந்து, அவளது உரவினரையே தெய்வமெனக் கருதி, இத்தாய் தந்தையர்களுக்கு அன்னமில்லையென்றுகூறித் தெருத்திண்ணையிலிருத்திவிட்டு, தான்மாத்திரம் கதவடைத்துக் கொண்டு, காதலியாளிட்ட அருஞ்சுவை அமுதை, மிகக்களிப்புடன் போஜனம்செய்கிறான். அங்ஙனமே, ஆசார்யாளையும் அலக்ஷியம் செய்கிறான். இங்ஙனம் வயதுமுதிர்ந்த தாய் தந்தைகளையும், ஆசாரியர்களையும், வருத்தப்படுத்தும் மகாபாபிகளுக்கு புதிதாயே நரகம் உண்டுபண்ணவேண்டும். அன்றியும், சின்னாட்களாக சீமையிலிருந்து வந்தபாதிரிமார் வெகு கிருபையுடையவர்போல் காட்டி இத்தேசத்திலுள்ள அநேக ஹிந்துக்களை கிறிஸ்தவராக்கிவிட்டது யாவருமறிந்ததே, மிக்க அருந்தவம்செய்து, பெற்றெடுத்த புத்திரர்களை அவர்கள் ஸ்கூலில் கல்விக்காக ஆசைப்பட்டு விடப்போக, பத்துமாதம்சுமந்து, வருந்திப்பெற்று, நாளொருமேனியும், பொழுதொருவண்ணமுமாகச் சீராட்டிப்பாராட்டி வளர்த்த கண்மணி போன்றபிள்ளைகளைப்பறிகொடுத்து கண்ணும்கண்ணீருமாய் புலம்பினவரனேகர். இப்பொழுது அதெல்லாம் தேவலையென்றாயிற்று. தற்காலத்தில் கிராமாந்தரவாசிகளும், தங்கள் குழந்தைகளுக்கு இங்கிலீஷ்படிப்பித்து பெரியஉத்தியோகம் கற்பித்துவிடவேண்டுமென்று, பேராசைகொண்டு, அங்குள்ளவீடு, வாசல்களையெல்லாம் விட்டு, நிலங்களையும்விற்று, இழிதொழிலைச்செய்தும், பட்டணம் சென்று படிக்கவைத்து, கையிலுள்ளகாசையுங்களைந்து பட்டபரீக்ஷையானபிறகும் வேலைகிடைக்காமல். அவர்களைத் திண்டாட விட்டதுமல்லாமல் தாங்களும் திண்டாடுகிறார்கள். இக்கதி புருஷரோடுநின்றது போராதென்று, பெண்களுக்கும் இந்தகதி உண்டாக்கவேண்டி, அவர்களையும் பள்ளியிற்சேர்த்துப் படிக்க விட்டார்கள். சில விடங்களில்பெண் கல்விச்சாலைக்கு ஹிந்துக்கள் பெயரையே வைத்திருக்கின்றனர். இதற்குக்காரணம்ஹிந்துக்கள் தமது பெண்களைக்கொண்டுவந்து விடுவார்களென்று கருதியதே, வீடு வீடாய்நுழைந்து தந்திரவார்த்தைகளைச்சொல்லி பெண்களை அழைத்துக்கொண்டு போகின்றனர். முதலில் இந்துஉபாத்திமார்களை வைப்பதுபோலக்காட்டி, பின்பு கிறிஸ்தவஉபாத்திமார்களை

வைத்துவிடுகின்றனர். கொஞ்சம் கொஞ்சமாய் நமது மதாசாரங்களைக் கெடுக்கவழிதேடுகிறார்கள். பிள்ளையார்சதுர்த்தி முதலிய விரதகாலங்களில், பிள்ளையார் சாப்பிட்டதா? பேசினதா? மண்பிள்ளையாரைக் கும்பிட்டீர்களா? என்று இவ்வாறான தூஷணைகளை சொல்லிக்கொடுக்கின்றனர். இந்துமதத்தை நம்பாமலும், ஹிந்து மதக்கிரந்தங்களைப் பிரமாணமாகக் கொள்ளாமலும், ஹிந்து மதப்பெரியாரை ஆதரிக்காமலுமிருக்கவேண்டிய உபதேசங்களைச் செய்து பேதைப்பெண்களின் சித்தம் கலங்கிடச்செய்கின்றனர். பெண்கள்படித்திடவே, அவர்களை பிரஸங்கத்திற்கும் அழைத்துப் போகின்றனர், கண்டவருக்கு ஷேக்காண்டு கொடுக்கச் செய்கின்றனர். “ முதற்கோணில், முற்றும் கோணல் ” என்பதற்கிணங்க நமது பெண்களை இளமையிலேயே, துஷ்டபழக்கத்தில் பழக்கினதனால் வந்த அனர்த்தமின்னதென்று எல்லோருக்கும் தெரிந்ததாய்விட்டது. இவ்வாறு பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும், பெரியாரிடம் பக்தியில்லாமல் போய்விட்டது. அப்படியிருக்கையில் ஸகோதர ஸ்னேகம் எங்கிருக்கப்போகிறது. 5-வயதுள்ள ஸகோதரரையே விலக்கிப் பொதுஸொத்தைச் சரிபாகம்செய்து கொடாமல் வஞ்சனை செய்கிறார்கள். இப்படிப்பட்டபாவிகள் இவ்வுலகில் அவதரிப்பார்களென்று தெரியாமல் ஔவையார், “ தந்தைதாய்ப்பேண், அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், ” என்று உரைத்தனர். இங்ஙனம் தபஸ்ஸுசெய்த இத்தாய்தந்தையர்களுக்கு, இப்படிப்பட்ட பிள்ளைகளைக்கொடுத்து, இங்ஙனம் துயரப்படுத்துவதால் என்னசுகத்தைபடைந்தாயோ? தெய்வமே? என்னலாபத்தைத்தானடைந்தாயோ ? இத்தன்மைஉனக்கு நன்றன்று. இனியாகிலும் இப்படிச்செய்யாதே. அவர்களுக்கு இனியாவது நல்லபுத்தியைத்தந்தருள்வாயாக. சுபம்!

---

## பஞ்சாங்கம்.

பஞ்சாங்கங்கள் தற்காலத்தில் பலவிதமாகப் பிரசுரமாகின்றன. அவை பொதுவாய் மூன்று வகைப்படும்— ஸித்தாந்த பஞ்சாங்கம், வாக்கிய பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம் என்று. அவற்றுள் ஸித்தாந்த வாக்கிய பஞ்சாங்கங்கள் ஒவ்வொன்

றிலும் பலவகை காணப்படுகின்றன. ஆனால் அந்த பஞ்சாங்க கணனத்திற்கு ஆதாரமாகிய மூலக்கிரந்தம் ஒன்றாயிருந்த போதிலும், அவை ஒன்றற்கொன்று திதி நக்ஷத்திராதி நாழிகைகளில் ஒற்றுமையுடையதாக காணப்படவில்லை. அது எந்த காரணத்தாலோ தெரியவில்லை. எக்காரணத்தாலேனுமாகுக என்றாலும் திதிமுதலியவைகளைத் தெரிந்துகொள்ளுவதற்காக அவைகளை வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு அடிக்கடி அனேக விஷயங்களில் ஸம்சயத்தையுண்டுபண்ணிவிடுகிறது. அப்படி ஸம்சயத்தையடைந்தவர்கள் அந்த ஸந்தேஹம் நீங்கி ஒரு நிச்சயமுண்டாக வேண்டி சிலவிடங்களுக்கெழுதி அவர்கள் பதிலளிப்பதற்குள் அந்த திதிப்ரயுக்தமாயோ, நக்ஷத்திரப்ரயுக்தமாயோ உள்ள விரதாதிகள் காலாதிக்கிரமத்தை அடைந்துவிடுகின்றன. அதனால் அந்தவிஷயமாக ஸம்சயப்பட்டவர்களுக்கு அந்த விரதானுஷ்டானம் ஏதோருகாலத்தில் நடத்தப்பட்டிருப்பினும் அது சரிவர அனுஷ்டிக்கப்பட்டதாக திருப்திவருகிறதில்லை. உதாரணமாக நாளது சுக்லவருஷத்தில் வந்த ஸாமோபாகர்மம், விநாயகசதுர்த்தி ரிஷிபஞ்சமி முதலியவைகள் ஒரு பஞ்சாங்கத்தில் போட்டபடி மற்றொரு பஞ்சாங்கத்தில் போடப்படவில்லை. அதனால்என்றைக்கு அவைகளை அனுஷ்டிக்கவேண்டுமென்று தெரிந்துகொள்ளுவதற்காக அனேகர் நமக்கு லெட்டர் எழுதியிருந்தார்கள். ஆயினும் அவர்களுக்கு உடனே பதில்கொடுக்க சில காரணங்களால் நேராமல்போயிற்று. அவைகளையனுஷ்டிக்கவேண்டிய காலங்களும் ஆய்விட்டன. இனிமேல் அந்த தினத்தைப்பற்றி எழுதுவதில் பிரயோஜனமில்லை. இது போலவே பின்னும் அனேக விஷயங்கள் நேரக்கூடும். அவைகள் ஒவ்வொன்றுக்கும் பதிலெழுதுவதைவிட அதன் மூலகாரணமான பஞ்சாங்கங்களின் சொரூபத்தை விசாரித்து எதை கிரஹிக்கலாமென்று சாஸ்திரம் போதிக்கின்றதோ, அதையொன்றமட்டில் வைத்துக்கொண்டுவிட்டால் இம்மாதிரி ஸம்சயங்கள் உண்டாக இடமில்லை.

பஞ்சாங்கங்களைப்பற்றி விசாரிக்கப்புகின் பல விவாதங்களுண்டு அபிமானத்தினால் செய்யப்படும் விவாதங்கள் சாஸ்திரார்த்தநிர்ணயத்திற்கு உதவா. இம்மாதிரி ஸம்சயங்கள் உண்டானபோது நமது முன்னோர்கள் விசாரித்துத் தீர்மானித்ததை கிரந்தமூலமாக எழுதிவைத்திருக்கிறார்கள். அதையே

நாமும் தீர்க்காலோசனைசெய்துபார்ப்போமானல் ஒரு நிச்சயமுண்டாகும். அதாவது திதிமுதலியவைகளைக் கண்டுபிடிப்பதற்கு ஜோதிஷசாஸ்திரத்தின் மூன்று ஸ்கந்தங்களுள் ஒன்றான கணிதஸ்கந்தத்தில் வழி கூறப்படுகின்றது. அதிலும் எந்த ஸித்தாந்தத்தையவலம்பித்து திதியாதிகளை ஸாதிக்கவேண்டியது என்றதைப்பற்றி பாஸ்கராசாரியார் அவர்கள் பீஜோபநயம் என்கிற கிரந்தத்தில் வியக்தமாய்க் கூறியிருக்கின்றார்கள். அதைப் பார்த்தவர்களுக்கு இன்னபஞ்சாங்கம் கிராஹ்யமென்ற நிச்சயமுண்டாகாமலிராது. அன்றியும் அதையனுஸரித்து ஸ்ரீநிவாஸதீக்ஷிதரென்ற ஓர் பெரியவரால் "திதிநிர்ணயகாரிகை" என்ற தர்மசாஸ்திரகிரந்தம் திதிநிர்ணயவிஷயத்திற்காகவே செய்யப்பட்டு, பம்பாய் முதலியவிடங்களில் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுமிருக்கின்றது. அது நூறுகிரந்தங்களுக்குள்ளடங்கிய சிறிய கிரந்தமாயிருப்பதால் அதை எமது ஆர்யதர்மத்தில் தமிழ்மொழிபெயர்ப்புடன் பிரசுரிப்பது ஆஸ்திகர்களுக்கு உபயோகமாகவிருக்கும் என்ற அனேகர்களின் கோரிக்கைப்படி அச்சிறிய கிரந்தம் தமிழ்மொழிபெயர்ப்புடன் ஆர்யதர்மத்தில் பிரசுரிக்கப்படும். அதைப் பார்த்து பஞ்சாங்கநிர்ணயத்தையும் அதன்மூலமாகத் தித்யாதிநிர்ணயத்தையும் செய்துகொண்டு அவைகளில் விரதாதிகளையும், சிராத்தாதிகளையும் அனுஷ்டிப்பார்களாக.

பத்திராதிபர்.

---

பிருஹதீச்சுவரமான்மியம் என்னும்

## சோழமன்னர்களின் சரித்திரம்.

(௫௰அ-வது பக்கத்தொடர்ச்சி)

ஆங்காங்கு விசாரித்து துர்க்கையினுடையவும் சாஸ்தாவினுடையவும் பலவாலயங்களையும் புதுப்பித்தான்.

प्रतापरुद्रं फालाक्षं दृष्ट्वा तं शासनातिगम् ।
मत्प्रभोस्सदृशाक्षिस्यात्कथं वै मानुषोऽप्ययम् ॥
शिवभक्तिबलेनैव तच्चचित्रपटस्थितम् ।
तत्फालाक्ष्य हरद्राजा चाक्षिहीनोऽभवच्चसः ॥

தன்னுணையமீரின பிராதபருத்திரனென்னும் மன்னன் நெற்றிக்
கண் பெற்றிருப்பதைக்கண்டு “இம்மனிதன் என்பிரபுவாகிய
சங்கரனைப்போல் நெற்றிக்கண்புடைத்தவனாக விருத்தலெவ்வாறு
தகும்’ என்று தன்சிவபக்தியின்மஹிமையால்சித்திரப்படத்திலுள்ள
வவ்வரசனின் நெற்றிக்கண்ணைப்பிடுங்கி யெடுக்கவே யவனும்
கண்ணிழந்தான். பிறகு பிரதாபபருத்திரனுமிச்சோழமன்னனுக்கு
கப்பஞ்செலுத்தலானான். இச்சோழவரசனு மப்பொருள்களைக்
கொண்டு பலசிவாலயங்களையுங்கட்டினான். இராஜராஜேந்திரனென்
னுஞ்சோழனிவ்வாறு பிரதாபருத்திரனைவென்றான்.

मणिं मूर्तिमतीञ्चैव चक्रे राजो नदीद्वयम् ।

இவ்வரசன் மணீ ( மண்ணியார் ? ) மூர்திமதீஎன்னு மிரண்டாறு
களையும் வெட்டினான். அவன்மனைவி மிக்கத்தேஜஸ்வாய்ந்த சூரி
யன்பே லொளிவீசும் மகனைப்பெற்றாள். அரசனுமக்குழந்தைக்கு
வீரமார்த்தாண்டனென்னும்பெயரிட்டான். தக்கவயதிலம்மகனைத்
தன்ஸ்தானத்திலிருக்கச்செய்து நீதிவழுவாதவர்களும் அறநெறி
யறிந்தவர்களுமான வமைச்சர்களாலு மாசிரியர்களாலும் சூழப்
பெற்ற வனாகச்செய்தான்.

இவ்வாறு மகனைச்சோழநாட்டிற்கு மன்னனாகச்செய்து, சிவ
கைங்கர்யங்கள்நடத்தியதாலேற்பட்ட புண்ணியவசத்தால் 78—
வது வயதுமுடிவில் மனையாளுடன் கைலையை அடைந்தான்.

## 20. அத்தியாயம்.

ஸூதர்:—வீரமார்தாண்டன் மாணிக்கவல்லீ யென்னுஞ் சேர
மன்னன்குமாரியை மணந்து அமராவதியை இந்திரனுள்வது
போலாண்டுவந்தான் தன்முன்னோர்களான சோழவரசர்களின்
முறையையே பின்பற்றித் தன்பட்டணத்திலுள்ளவர்களை
விபூதி ருத்திராக்ஷமணிந்தவர்களாகவும் சிவார்ச்சகர்களாகவுஞ்
செய்தான். தன்தேசத்திலாங்காங்கு பிராமணர்களின் அக்கிர
ஹாரங்களும் மடங்களும், கவேரியின்படிக்கட்டுகளும், வேதங்
களினோசையும் சாஸ்திரங்களின் த்வனியுன்னிறைந்த பிரும்ம
சாரிகளின் பாடசாலைகளும், தண்ணீர்ப்பந்தல்களும், போஜன
சாலைகளும், வழிப்போக்கர்கள் களைதீர்த்துக்கொள்ளும் மண்

டபங்களும், வேள்விகள் இந்திரனை அழைக்குமுராத்தசத்தம் நிறைந்தயாகசாலைகளும், காவேரியினிருகரைகளிலும் நன்கு விளங்கின. அங்குஹவிர்பாகமுண்டதா ஸ்வர்க்கத்திலிருந்த தேவர்களுக்கெல்லாந் தொந்திவிழுந்துபோயிற்று. அங்கு அக்கினிஹோத்திரப் புகைக்குவியல்கள் சுவர்க்கத்திற்கு ஏறும் படிக்கட்டுகள்போல் விளங்கின. தத்துவோபதேசத்திற் பற்றுடைய துறவிகளங்கு மிகவுமாதரிக்கப்பட்டனர்.

அவ்வரசன், மஹாமுனிவர்களாற் பிரதிஷ்டைசெய்யப்பட்டனவும் தானாகத்தோன்றியவைகளுமான 60 சிவாலயங்களை, பிராகாரங்கள் கோபுரங்கள் மண்டபங்கள் கட்டுவித்துப் புதுப்பித்தான். காவேரியினிருகரைகளிலுமுள்ள, வைத்தீச்சுவரன்கோவில் ( ஸடாவிக்ஷேத்திரம் ) திருநெய்த்தானம், திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர் முதலிய ஸப்த ஸ்தானங்களிலுள்ள சிவாலயங்களைக் கட்டினான். கும்பகோணத்தில் சாரங்கபாணியுடையவும் சக்கிரபாணியுடையவுமாலயங்களையும் ஸாரக்ஷேத்திரத்தினாலயத்தையும் கட்டுவித்து வேறுசில விஷ்ணுவாலயங்களையும் நிர்மாணஞ்செய்தான். ஸோமேசர், நாகேசர், விசுவநாதர், அபிமுக்தேசர், இவர்களினாலயங்களையும் மாகதீர்த்தக்கரையில் கௌதமேசரினாலயத்தையுங் கட்டினான்.

சத்துருக்களையெல்லாம்வென்று திருபுரசத்துருவாகிய சங்கரனினடிமலர்களையே யர்ச்சித்துவந்த வம்மன்னனொருநாள் தன் சபைநடுவே தனது விருத்தபுரோஹிதரான தேவசர்மாவை நோக்கிக்கோங்கணேசரின் சரித்திரத்தைவினவலானான்.

அரசன்:—ஏ! சிறந்ததவசியே! யாருக்கருள் புரியவிக்கோங்கணேசர் தோன்றினாரென்பதைக்கூறும் ?

அரசன் மொழிகேட்டவவ்வந்தணர் கைகூப்பிக்கொண்டு கூறலானார்'

தேவசர்மா:—தத்தாத்திரேயரின் சிடர்களிற் கோங்கணரேன்னொருவ ரிருந்தார். அவர்ஐந்துதீக்களின் நடுவேயமர்ந்து, சுவாசத்தையடக்கிப் பொறிகளைவென்று நூறு வருஷங்கள் இமயமலையினுச்சியிற் றவஞ்செய்து வந்தார்.

அவர் இவ்வாறு புரிந்த தபசினாற்சந்தோஷமடைந்த சங்கரர் திருநீறு ருத்திராக்ஷமாலைகள் அணிந்த அத்தபசியைநோக்கிக் கூறலானார்.

ஈசன்:— உன் தவத்தாற் சந்தோஷமடைந்தேன், உனக்கு விருப்பமானதைக் கேள், உடனே அதனையளிக்கின்றேன். உனக்கொப்பற்ற சித்தி ஏற்பட்டிருக்கிறது. ஹே பக்தனே! மிக்கப் பரிசுத்தமான சமீவனமென்று ஒரு ஸித்திஸ்தானமிருக்கிறது. திருவையாற்றின் தெற்கே காவேரியின் மூன்று குரோசதூரத்தில் விண்ணாற்றிற் (வீணாநதிக்) கும் தெற்கே வடவாற்றின் (மணிமுக்தாநதீ) கரையில் ஸுதாபுஷ்கரணியின் அருகில் தஞ்சேசர் என்னும் ஓர் லிங்கமிருக்கிறது, ஸ்ரீஆநந்த வல்லீதேவியுடன் அல்லிங்கத்தைக்கண்டு வணங்கிப்பூஜித்து, அதனீசானதிக்கில் வஸிஷ்டதீர்த்தத்தருகில் வஸிஷ்டேசரையும், தேவதீர்த்தக்கரையில் கரதலேசரையும் கண்டு வணங்குவாயாக. பராசரமுனிவர் எவ்விடத்திற் றவஞ்செய்து ஸித்தி பெற்றரோ, அவ்விடத்தே யுனக்கும் சித்தியேற்படப்போவதென்பதற்கையமில்லை. அங்கு கரிகாலனென்னுஞ்சோழனல் சிவகங்கைக்கரையிலுயர்ந்த கர்ப்பக்கிருஹத்தில் பிருஹதீசரென்னும் லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. அங்கு பிரஹதம்பிகையுடன் அல்லிங்கத்தைத் தரிசித்து, அதன்வடக்கில் கோங்கணரென்னும் லிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து பூஜைசெய்வாயாக.

சிவனாணையால் அடங்காவானந்தங்கொண்ட அச்சித்தர் கேதாரம், காசீ, காஞ்சீ முதலிய புண்யஸ்தலங்களையும், காவேரியின் இருகரைகளிலும் ஸ்ரீகண்டேசர் முதலியவர்களையுந் தரிசனஞ்செய்துகொண்டு சமீவனமடைந்து கோங்கணேசரென்ற பெயருடன் ஓர் சிவலிங்கத்தையங்கு பிரதிஷ்டைசெய்தார். பஸ்ம ருத்திராக்ஷங்களணிந்த சரீரத்துடனும் சடைபோட்டுக்கொண்டும் மாவுரி உடுத்திக்கொண்டும் பஞ்சாக்ஷரமின்றி வேறோர் மந்திரத்தையும் ஜபிக்காமல் அவ்வீசனின் முன்னிலையிற் சித்ததீர்த்தத்தின் கரையில் தவஞ்செய்துவந்தார். அவ்வாறு பன்னிரண்டு வருஷங்கள் தவஞ்செய்துவரவே முடிவில் சித்தரின்முன்பு கோங்கணேச்சுவரர் ஞானம்பிகை என்னுமம்பிகையுடனும் நூறுமன்மதர்களினழகையொருங்கே திரட்டிச் சமைத்தாற்போன்ற வனப்புட

னும், கங்கையையுஞ் சசிகலையையும் சடையிற்றாங்கியும், கறுத்த கண்டத்துடனும், முக்கண்ணுடனும், விருஷபாரூடராய்த் தோன்றினர்.

அப்பொழுது அச்சித்தர் கோங்கணேசரென்னும் லிங்கத்தினின்றுந்தோன்றிய வாதிகாரணமூர்த்தியை வணங்கிக்கூறலானர்.

கோங்கணஸித்தர்:— ஹே நன்மையபயப்பவரே! விரூபாக்ஷரே! சந்திரகலை பூண்டவரே! கஞ்சாக்ஷனல் அர்ச்சிக்கப்பட்ட வடிமலர்களையுடையீரே! கோங்கணேசரே! என்னைக்காரும்.

யோகித்தலைவர்களால் வணங்கப்பட்ட பாதகமலங்களையுடையீரே! கட்செவிகளைக் கங்கணமாக வணிந்தவரே! புலித்தோலையுடுத்தியவரே! கோங்கணேசரே! என்னைக்காரும்.

எட்டுருவமெடுத்தோரே! காலனைக்கொன்றவரே! தக்ஷயாகத்தைத்துலைத்தவரே! மலரையொத்த கைதனில் திரிசூலந் தாங்கியவரே! கோங்கணேசரே! என்னைக்காரும்.

ஸூதர்:– இவ்வாறு துதித்துநின்ற கோங்கணஸித்தரைநோக்கிச் சிவன் சொல்லலானர்.

ஈசன்:— உன்னல் அர்ச்சிக்கப்பட்ட இல்லிங்கத்திலிருந்துகொண்டு வேண்டியவர்கள் விருப்பமெல்லாமளித்துவருவேன். ஏ சித்தரே! என் முன்னிலையில் இச்சித்ததீர்த்தத்தில் மூழ்கி இத்துதியால் என்னை ஸ்தோத்திரஞ்செய்கிறவர்களும், இங்கு என்னருகே வசிக்கின்றவர்களுமான மனிதர்களுக்குக்கைலாஸவாசமளிப்பேன். இங்கு வசிக்கின்றவர்களும் எல்லாப்புண்யகாலங்களிலும் பிரதோஷம், திங்கட்கிழமை, சிவராத்திரி இவைகளிலுமென்னைத்தர்சிக்கின்ற எல்லா பக்தர்களுக்கும் என்னை வழிபடுவதில் விருப்பமுடையவர்களுக்கும் இயமனாலும், இயமதூதர்களாலும் பயமென்பதே ஏற்படாது. உனக்கு தபோஸித்தி ஏற்பட்டுவிட்டது. நீ கைலாஸஞ் செல்வாயாக.

ஏ முனிவர்த்தலைவர்களே! அதுகேட்ட அச்சித்தர் ஈசனை வணங்கி கதிரவன்போல் ஒளிவீசும் விமானமேரிக் கைலாஸகிரியையடைந்தார். சங்கரும் அம்மனுடன்கூட அச்சிவலிங்கத்துள்ளே மறைந்தார்.

N. வைத்தியநாதசாஸ்திரி,
ஸரஸ்வதிமஹால், தஞ்சை.

# விவாகமசோதாவும்நமதுகடமையும்.

ஆர்யர்களே! இனி நாம் செய்யவேண்டிய வேலை யாது? நாம் யார்? நாம் ஏன் இங்கு வந்தோம்? நமக்கு முக்கியமாய்ச் செய்யவேண்டிய வேலை நம் தலைமேல் ஏதாவதிருக்கிறதா? அவ் வேலை எத்தகையது? நாம் விலங்கினம் ஊர்வனமுதலிய ஜீவராசி யைப்போல் உண்பது உறங்குவது என்ற தொழிலைமட்டும் செய் தால் போதுமோவென்பன முதலியனவற்றைச் சற்று ஆராயத் தலைப்பட்டால் வயிற்றுப்பிழைப்புக்காக உத்தியோகம் பெற்று நம் யஜமானன் குற்றம் வந்து நம்மைக் குற்றத்துக்குள்ளாக்கிவிடு வானோ, ஜெயிலில் போட்டுவிடுவானோ, சொத்தைப் பறிமுதல் செய்துவிடுவானோ, கடைசியாய் தலையைக் கொய்யச்செய்துவிடு வானோ என்றிவ்வாறெல்லாம் தினே தினே நடுங்கிப் பாடுபடும் நமக்கு ஒருசமயம் நல்காலம்வரும். அப்போது ஆகா! நாம் இந்த அல்பஜீவனத்திற்காக இம்மகாபாதகங்களைச் செய்வானேன். இன்று மரிப்போமோ, நாளை போவோமோ, இறந்தபின் நம்மை பாபி போனான் என்று சொல்லாமலும் நம் பரலோகமார்க்கத்தின் சாதனங்களை அறிந்து சக்திக்கேற்றவாறு அவைகளைச் சம்பாதிப் போமென்றும் தோன்றாமலே போகாது. அவ்விதம் ஒருகாலம் தோன்றாமலே போகாதென்பதுகொண்டே

देशस्यैषस्स्वभावोऽयं नास्तिको म्रियते न हि ।

இத்தேசத்தில் நாஸ்திகனைச் சாகமாட்டான் "என்பது ஸ்வபாவம் என்றார். ஐயோ! இப்போது அம்மொழியும் பாளுமோவெனத் தோன்றுகிறது,என்செய்வோம். இருக்கட்டும். இனி பிரகிருதத்தி விறங்குவாம்.

சிலகாலமாக நமது மதத்திற்கு உயிர்நிலையான விவாகதர்மத் தில் தலையிட்டு சாரதா என்பவர் திருத்தவந்ததும் அதை அனு வதித்துப் பரிஷ்காரப்படுத்திப் பிரசுரித்ததும் அது செய்யத்தக்க தல்லவென்று ஆர்யர்கள் கூக்குரலிட்டதும் யாவரும் அறிந்ததே. அதைப்பற்றி இங்கு வளர்க்கவாவில்லை.

• இப்பொழுது அவ்விஷயம்பற்றி இந்தியா சட்டஸபையில் விவாதம் நடக்க ஆரம்பித்ததில் வைதிகமார்க்கத்திலுள்ள ஆஸ்திக ரனைவரும் ஆங்காங்கு ஒன்றுசேர்ந்து நமது பிரதிநிதிகளை மகா

கனம் வைஸ்ராய் அவர்களைப் பேட்டிகண்டு பேசி நமக்கு ஸாதகம் செய்யுமாறு நியாயவழியில் வேண்டிக்கொண்டோம். அவ்விதமே சென்ற ஆகஸ்ட் 31௳யில் நமது பிரதிநிதிகள் ராஜப்பிரதிநிதியைக் கண்டுகொண்டதில் நமது வசனங்களை ஆர அமர விசாரித்துவிட்டு இறுதியில் என்னால்கூடியதைச்செய்கிறேனென்று பதிலளித்தனர்.

பிறகு 4—9—29-ல் சட்டஸபையில் விவாதத்திற்கு வருவதற்கு இரண்டுதினங்களுக்கு முன்னமேயே தினஸரி பேபர்களில் வைதிகக்கூட்டத்தினர் ஆங்காங்கு சென்று நமது சாரதாமசோதாவைச் சட்டமாக்காவண்ணம் வேலைசெய்கிறார்கள். தந்திகளும் கையெழுத்துகளும் வந்து தினமும் குவிகின்றன. ஆகவே நம்மவர்கள் துரிதமாய் வேலை செய்யவேண்டும். இல்லையேல் நம் பில் புல்லாய்விடுமென்று கூவி அழைத்தனர். அதற்கிணங்க மூலை முடுக்குகளிலிருந்து ஷடி மசோதாவுக்கு ஸாதகமாய் தந்திகள் குவிய ஆரம்பித்தன. 4௳யும் வந்துவிட்டது, இனியாது கூறல் வேண்டும், ஹோம் மெம்பர் கனம் கிரிரார் என்பவர் கவர்ண்மெண்டின்சார்பாக சாரதாமசோதாவைச் சட்டமாக்கவேண்டிய அவசியத்தை அளவுக்குமீறி உபன்யஸித்து அப்படியே அம்மசோதாவைச் சட்டமாக்குவோமென்றும் கூறினர். வைதிகர்களது பிரார்த்தனைக் காற்றில் பறக்கவிடப்பட்டது. பிறகு 10௳யிலும் இவ்விஷயம் விவாதத்திற்குவந்ததில் அங்கும் நமக்கு ஸாதகமில்லை. இனி 19௳ முடிவு தெரிவிக்கப்படுமாம். யாது முடிவு இப்போதிருக்கும் நிலையைக்கவனித்தால் சாரதாமசோதா இப்போது எந்த நிலையில் கொண்டுவரப்பட்டிருக்கிறதோ, அந்நிலையில் பாஸ் செய்வதற்கு கவர்ண்மெண்டார் மிகவும் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்றனர். இதில் ஈசன் கட்டளை எவ்விதமிருக்கிறதென்பதை மட்டிலும் நாம் கவனிக்கவேண்டும். ஈசன் கட்டளை என்பது கவர்ண்மெண்டார் தீர்மானத்திலிருந்து விளங்கும். அப்போது நாம் செய்யவேண்டிய கடமை யாதென்பதை இனி விசாரிப்பாம்.

இவ்விஷயத்தில் கவர்ன்மெண்டார் இம்மசோதாவை சட்டமாக்கிவிட்டால் நாம் செய்யவேண்டிய வேலைப்பொருப்பு நமக்கு அதிகம். நாம் நமது பரமாத்மாவுக்காகவும் அனாதிஸித்தமான வேதபுருஷனுக்காகவும் நம் குலமகரிஷிகளின் கட்டளைக்காகவும் அக்குலத்தில் நாம் பிறந்ததற்காகவும் அல்பமான இப்

பூலோகவாழ்க்கை நமக்கு ஸ்திரமற்றதென்பதைப் பிறகு விளக்குவதற்காகவும் இவ்விஷயத்தில் அரசாங்கத்தோடு நாம் போர் புரியவேண்டும். போர்புரிவதென்பது கத்திச்சண்டை குத்துச் சண்டை அல்ல. அவர்கள் நியாயமெனச் சட்டமாக்கியிருக்கும் மசோதாவின் ஷாத்தை ஏற்காமல் அதற்கு எதிரிடையாய் நம் வேதசாஸ்திர ஆணைப்படி நடந்து அதற்காக அவர்களிடும் கண்டன தண்டனையை அனுபவிப்பதேதான். மசோதாவுக்கு எதிராய் நடந்தால் அவர்கள் ஜயிலில் வைப்பார்களாம். அபராதம் விதிப்பார்களாம். இதற்கு நாம் கட்டுப்பட்டே தீரவேண்டும். இதனால் நமக்கு யாதொரு பாபமும் ஸம்பவிக்காது. ஏனெனில் இப்போது அரசாங்கத்தில் இவ்விஷயத்தில் நம்மைத்தண்டித்தால் அது எதற்கு? வேதசாஸ்திரக்கொள்கைப்படி நடக்காதே, அவ்விதம் நடந்தால் உன்னைத் தண்டிப்பேன் என்றல்லவா கூறியதாய் ஆகிறது. நாம் அதற்குக் கீழ்ப்படிதல் நியாயமோ? என் வேத சாஸ்திரப்படிதான் நடப்பேன். அதற்காக என்னைத்தண்டித்தாலும் ஸரி என் உயிரை மாய்த்தாலும்ஸரி அதற்குத் துணிந்தவன் நான் என்று சொல்வதற்கு யாது தடை? எத்தனை ஆயிரம் பெயர்கள் நம் முன்னோர்கள் மதத்திற்காக உயிரைவிட்டிருக்கின்றனர். இவ்விஷயத்தில் தைரியமாய் நின்றால்தான் நாம் ஸநாதனதர்மானுஷ்டானமுள்ளவர்களாவோம். இல்லையேல் நாம் மனிதப்பதர்தான். அரசன் ஆணையை மீறலாகாதென்பது நமக்கு முக்கியமாயினும் குருவின் ஆணையை மீறக்கூடாதென்ற சீடனுக்கும் பதியின் ஆணையை மீறக்கூடாதென்ற மனைவிக்கும் சிற்சிலவிடங்களில் விலக்கு உண்டு. அதுபோலெனச்சொல்வோம். பாருங்கள் இன்று இந்தசட்டத்திற்குட்பட்டால் அடுத்தாப்போல் நம் மேதாவிகளால் கைம்பெண்களான இளம்கன்னிகளுக்குக் கட்டாயம் விவாஹம் செய்யவேண்டும். அதன் பரிதாபம் ஸகிக்கமுடியவில்லை. எந்தவீட்டில் அவ்விதம் பெண்களிருக்கின்றனவோ அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் விவாகம் செய்துதீரவேண்டும். புருஷன் எவனாயினும் ஸரி என்று ஒரு சட்டம். கல்யாணமான தம்பதிகள் கலகம் முதலியன செய்துகொண்டொருவருக்கொருவர் பிரிய இஷ்டப்பட்டால் பிரிந்து வேறொரு விவாகம் செய்துகொள்ளலாம் என்றொரு சட்டம். ஸ்திரீகள் விவாகம் வேண்டாமென்று விரும்பினால் அவ்விதமே இருக்கலாம். பிறகு எப்போது விரும்பு

வாளோ அப்போது எவனையாயினும் மணந்துகொள்ளலாம். புருஷன் அவ்விதம் செய்துகொள்ளவில்லையோ அதுபோல்தான் என்று ஒரு சட்டம். புருஷர்கள் தாயாதபாகம் பிரித்துக்கொள்வதுபோல் ஸ்திரீபிரஜை ஏன் அவ்விதம் பாகித்துக்கொள்ளக்கூடாது; ஆகையால் அவர்களுக்கும் பாகமுண்டென்றொருசட்டம். இன்னும் சட்டம் சட்டமாய் நம்மேல் விழாதா? இவ்வளவும் இப்போது காத்துக்கொண்டு பிருகிருத சட்டத்தின் முடிவையே எதிர்பார்த்துநிற்கிறது. ராஜாக்ஞை என்று வணங்கினால் இவ்வளவுக்கும் தலைகுனிந்தே தீரவேண்டும். ஆகவே இப்போதே நாம் ஒற்றுமைப்பட்டு இச்சட்டத்தை எதிர்க்கவேண்டும். இது சற்றும் நியாயமில்லாததே. இனி இவ்விதம் ஏன் செய்தார்களென்பதைக் கவனிப்பாம்.

சட்டஸபையில் இதுகாறும் நமது மதவிஷயமாய் மட்டிலும் சிற்சில விஷயங்கள் கொண்டுவரப்பட்டன. அதில் சுமார் 15-வருடத்திற்குமுன் பாஸுவென்பவர் ஹிந்துவானவன் எம்மதத்து ஸ்திரீயையும் விவாகம் செய்துகொள்ளலாம். அது ஹிந்துசட்டப்படி செல்படி உள்ளதாகும் என்று கொண்டுவந்தார். அதை அப்போது வைஸ்ராய் ஸபையில் இருந்த அட்கின்ஸன் என்ற ஆங்கிலப்பிரபு இப்போதிய கனம் கிரிராரைப்போல் சொல்லாமல் இச்சட்டம் இந்துமதத்தையே கெடுத்துவிடும். ஆகையால் இந்தியாமுழுமையும் அபிப்பிராயம்கேட்டாகவேண்டும். அதிலும் ஆஸ்திகஹிந்துக்களின் அபிப்பிராயத்தைத்தான் அதிகம் கவனிக்க வேண்டிவரும் என்று கூறி யாவருடைய அபிப்பிராயத்தையும் நன்கு கேட்டுப் பிறகு அதைத்தள்ளுபடிசெய்துவிட்டார். அதன் பிறகு அதையொட்டியே பேடல், கவர் என்பவர்கள் கொண்டுவந்தனர். அவர்களின் கதியும் அப்படியே ஆய்விட்டன. பிறகு இந்து மததர்மஸ்தாபன சட்டமென்று நம் ராஜதானியில்மட்டிலும் கிளம்பியது. அதை யாவரும் எதிர்த்தும் காலம்சென்ற பணகால்ராஜா என்பவர் ஒருவரையும் லக்ஷ்யம்செய்யாது சட்டமாக்கினர்.

(தொடரும்)

M. N. சுப்பிரமணியசாஸ்திரி.

# ஓர் கண்டனத்தீர்மானம்.

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளின் சிஷ்யாநுக்ரஹ பூர்வமான விஜயயாத்திரையின் பயனாக ஆங்காங்கு பக்திமான்களுக்கு அதர்மத்தில் வெருப்பும், தர்மத்தில் ஆதரவுமதிகமேற்பட்டுவருகிறது பிரதியக்ஷமே.

மேற்கண்ட நற்செய்கையின் மகிமையால் நாளது ஆவணிமீ 11௳ கோகுலாஷ்டமி புண்யதினத்தில் காட்டுமன்னார்கோவில் மகாஜனங்கள் நூற்றுக்கணக்காய் வேதபுஷ்கரிணீ தீர்த்தமண்டபத்தில் மாலை 3-மணிக்கு ஒன்றுசேர்ந்து, அடுத்த ஸெப்டம்பர்மீ ராஜப்பிரதிநிதி ஸபையில் ஆலோசனைக்குவரும் "விவாகவயது மசோதா" நமது பிராசீன ஆசாரத்துக்கும் ஸநாதனதர்மத்துக்கும், மகாராணியார் ஏற்கனவேசொல்லியிருக்கும் உறுதிமொழிக்கும், முற்றிலும் விரோதமாயிருக்கிறதென்று கண்டித்து தீர்மானம் செய்ததுமன்றியில், அநேக கையெழுத்துகளும் செய்தனர். அச்சமயம் பலர் வேண்டுகோளின்பேரில், அங்கு அக்கிராஸனம் வகித்த கோ ஆபரேடிவ் பாங்கு தலைவர். ஸ்ரீமான், ஸ்ரீரங்காசாரியார் அந்த தீர்மானத்தையும், கையெழுத்துக்களையும், மேல் அதிகாரிகளுக்குஅனுப்பக்கேட்டுக்கொள்ளப்பட்டார். உள்ளூர் கிருஹ்யக்ஞ. வி. உமாமகேச்வரசாஸ்திரி ஷை மசோதாவை சுருதி, ஸ்மிருதி ஆதாரத்துடன் கண்டித்துப் பிரஸங்கித்தார். புராணம் ஸ்ரீநிவாஸாசாரியார் ஆமோதித்து உபந்யஸித்தார். இவ்விதமே ஒவ்வொரு அக்ரஹாரத்திலும் அவரவர்கள் தான்மட்டிலுமிதைக் கண்டித்துப் பேசுவதுடன் நிற்காமல் ஒன்றுசேர்ந்து, விரைவில் கண்டனத்தீர்மானங்கள் அனுப்பினால் பயனைக்கொடுக்கப்பொருப்பேற்றவரும், சாச்வத தர்மகோப்தாவானவருமான ஸ்ரீ கிருஷ்ணன் அனுகூலம்செய்வார். ஒத்தாசையை அபேக்ஷிப்பவர்களுக்கு, கண்டனதீர்மான பாரங்களுடன் வருவதற்கும் நான் சித்தமாயிருக்கிறேன்.

சுபம்!

"கிருஹ்யக்ஞ" வி. உமாமகேச்வரசாஸ்திரி. காரியதரிசி

பிராமணஸபை, தென்னார்க்காடுஜில்லா.

# ஓர் வேண்டுகோள்.

ஹிந்துக்கள் முக்கியமாக பிராம்மணர்கள் ஸம்ஸ்கிருத பாஷையைக் கற்கவேண்டியது மிக்கவும் அவசியம். அதனால்தான் இந்து ஆசாரம் பல ஆயிரம் வருஷம் நம்முடைய மதம், தேசம், ஆசாரங்கள் நடந்துகொண்டுவந்தது. இப்பொழுது கழிந்த நூற்றாண்டிலிருந்து ஸம்ஸ்கிருதபாஷையின் அபிமானம் வர வரக் குறைந்துவருகிறது. அங்கு மிங்கும் கொஞ்சம் கொஞ்சம் ஏதோ சில பாடசாலைகள் இருக்கின்றன. அதிலிருந்து பயின்று வருகிறவர்களுக்கு ஜீவனம் மிகவும்சிரமமாயிருக்கிறது, அதனால் அவர்களுக்கு ஜீவனம் நன்றாகயிருக்கவேண்டுமானால் ஜனங்களும், அதிகாரிகளும் முன்வரவேண்டும். அதற்காக அவரவர்களால் கூடியமட்டும்பணம்சேகரித்து ஒருநிதி தயார்செய்து அதிலிருந்து வருகிறவரும்படியைக்கொண்டு சரியான வெகுமானம் பண்டிதர்களுக்குக் கொடுக்கலாம். இப்பொழுது அத்வைதசபை, மற்றும் சில சபைகளும் செய்கிறதாகத்தெரிகிறது. அது சமுத்திரத்தில் ஒரு பொட்டுமாதிரியிருக்கிறது. அதனால் தங்களுடையபத்திரிகை மூலம் எல்லா ஆர்யஜாதிகளுக்கும் முக்கியமாய் பிராம்மணர்களுக்கு ஒவ்வொருவர் 1-ரூபாய்கொடுத்தால் குறைந்தது இரண்டு மூன்று லக்ஷமாய்விடும். அதிலிருந்து தேவபாஷையான ஸம்ஸ்கிருதத்திக்கு ஊக்கமாக வேலைசெய்யலாம். எவ்வளவோ விவாகங்களிலும் மற்றும் வீட்டுவிஷயங்களிலும், சம்பாவனையில் இதுகூட ஒன்றென்றிருந்தால் பலதுளி பெருவெள்ளமாய்விடும். இந்த விஷயத்தில் தங்களுடையமடத்திலிருந்து ஒருஸ்ரீமுகம் பிறப்பித்தால் நல்லது.

இரண்டாவது ஹிந்துக்கள் முக்கியமாய் ஸம்ஸ்கிருதபாஷை கற்றுக்கொள்ளவேண்டியது அவசியம். ஒவ்வொருபள்ளிப்பையன் ஆங்கிலம்படிக்கும்போதே தினம் ஒருநாழிநேரம் படித்தால் எவ்வளவோ நன்றாகயிருக்கும். மேலும் பள்ளிக்கூடராஜாவில் பையன்கள் வீணாகக் காலம்கழிக்கிறபொழுது அங்காங்கு வித்வான்கள் மூலமாக ஏற்பாடுசெய்து பையன்களுக்குக் கற்பிக்கலாம். அமெரிக்காவில் ரஜாகாலங்களில் பையன்கள் ஒவ்வொரு தொழிலைக் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

கே, ஸுந்திரமய்யர்,